பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு தை மீ 21 உ ஞாயிற்றுக்கிழமை (03-02-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 68

# மக்கள் கூட்டங்களின் மீதே பொம்மர்கள் இப்போது இலக்கு

## பொது இடங்கள், அகதி முகாம்கள் ஆகியவை மீதும் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப்ரவரி 3

ஸ்ரீலங்கா விமானப்படை பொம்மர்களின் இலக்கு இப்போது மக்கள் கூட்டங்களின் மீது திரும்பியிருக்கிறது.

தமிழ்ப் பிரதேசங்களில் மக்கள் கூடும் பொது இடங்கள், அகதி முகாம் பாடசாலைகள், சந்தைகள், சந்திகள் ஆகியவற்றை இலக்கு வைத்தே அனேகமாக இப்போது குண்டு வீச்சுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிளிநொச்சி பண்டிநிலைப் பகுதி, புதுக்குடியிருப்பு நாற்சந்தி, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம், குண்டி பிள்ளையார் கோயிலடி, கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் பாடசாலை அகதி முகாம், நாச்சிக்குடா சந்தி, முழங்காவில் பாடசாலை ஆகியவை உட்பட பொது இடங்கள் பல கடந்த சில நாட்களில் பொம்மர் தாக்குதலுக்கு இலக்காகி இருக்கின்றன.

இந்தச் சம்பவங்களில் அப்பாவி மக்கள் பலர் உயிரிழந்துள்ளனர். பொதுக் கட்டடங்கள், மக்களின் உடைமைகள் பெருமளவில் அழிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## அகதி முகாம் பாடசாலை மீது கொக்குவிலில் குண்டு வீச்சு!

### நால்வர் காயம்; கட்டடங்கள் நாசம்

கொக்குவில், பெப். 3

அகதிகள் தங்கியிருந்த கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா மகளிர் மகா வித்தியாலயத்தின் மீது ஸ்ரீலங்கா விமானப்படை விமானங்கள் நேற்று பிற்பகல் 3.15 மணியளவில் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் கல்லூரியின் பல கட்டடங்கள் நாசமாகின. அக் கட்டடங்களில் தங்கியிருந்த அகதிகளில் ஒருவர் படுகாயமடைந்தார். ஏனையோர் தெய்வாதீனமாகத் தப்பினர்.

கொக்குவில் பகுதியை வட்டமிட்ட இரண்டு பொம்மர்கள் அடுத்தடுத்து நான்கு குண்டுகளை பாடசாலை வளவுக்குள் வீசின.

இதனால் பாடசாலையின் மாடிக் கட்டடம் ஒன்று

[4 ஆம் பக்கம் பார்க்க]

## நாவற்குழியிலும் பொம்மர் தாக்குதல்

யாழ்ப்பாணம், பெப். 3

நாவற்குழியில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின.

குண்டுவீச்சில் ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. ஒருவர் காயமுற்றார். சிவல்தொழிலாளியான கைதடி நவபுரத்தைச் சேர்ந்த கந்தன் செல்லன் (41 வயது) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

காயமுற்றவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இப்பகுதியில் தென்னை மரங்கள் சில குண்டுவீச்சினால் நாசமாகின. (ஓ-15)

## ஷப்றாவுக்கு அங்கீகாரம்

யாழ்ப்பாணம். பெப். 3

1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் நிறுவனம் உட்பட இருபத்தியொரு நிறுவனங்கள் மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

நாட்டில் மொத்தமுள்ள

[4 ஆம் பக்கம் பார்க்க]

## முழங்காவில், நாச்சிக்குடாவில் நேற்று பொம்மர் குண்டுவீச்சு!

### பொதுக் கட்டடங்கள் பெரும் சேதம

யாழ்ப்பாணம், பெப். 3

நாச்சிக்குடா, முழங்காவில் பகுதிகளில் நேற்றுக் காலை 8.45 மணியளவில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இதனால் பொது இடங்கள் மற்றும் பல கட்டடங்கள் சேதமுற்றன. இருவர் காயமடைந்தனர்.

நாச்சிக்குடா சந்தியில் வீசப்பட்ட குண்டினால் பெற்றோல் நிலையம், தேனீர்க் கடை, மக்கள் கடை, இரு பலசரக்குக் கடைகள், கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடம் ஆகியன சேதமுற்றன.

முழங்காவிலில் வீசப்பட்ட குண்டினால் முழங்காவில் மகாவித்தியாலயத்தின் இரு கட்டடங்கள், விவசாய உற்பத்தி நிலையம் ஆகியன சேதமுற்றன.

இந்தத்தாக்குதலில் ரி. சிவகுரு [வயது 65], சிறு சந்திரசேகரன் [வயது 28] ஆகியோர் காயமடைந்தனர். (உ)

## கொழும்பு செல்வதற்கு வவுனியாவில் தவம்

வவுனியா, பெப். 3

யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து கொழும்பு பயணமாவதற்கென வவுனியாவுக்கு வந்த ஆயிரக்கணக்கானோர் தமது பயணத்தைத் தொடர முடியாமல் இங்கு அவஸ்தைப்படுகின்றனர்.

யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து ஒருவாரத்துக்கு முன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பொம்மர் பதிந்தது; இராணுவமும் சுட்டது!

நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் வவுனியா, தாண்டிக்குளத்தில் கொழும்பு செல்வதற்காக வரிசையாகக் காத்து நின்ற மக்கள் கூட்டத்தை நோக்கி பொம்மர் ஒன்று தாழப் பறந்து வந்து பயமுறுத்தியது. அதேசமயம் இராணுவத்தினர் தமது 'சென்றி'யில் இருந்து மக்கள் கூட்டத்தை நோக்கி சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர்.

மக்கள் அங்கும் இங்கும் சிதறி ஓடினர்: சிலர் வயற்பகுதிகளை நோக்கியும் ஓடினர். தெய்வாதீனமாக வயல்வெளியில் 'விபரீதம்' ஏதும் ஏற்படவில்லை.

இராணுவத்தினர் சுட்டதிலும் எவரும் காயமடைந்ததாகத் தெரியவரவில்லை. பொம்மரும் தாக்குதல் நடத்தாமல் சென்றுவிட்டது. [ஒ]

## செஞ்சிலுவை அதிகாரி கவலை தெரிவிப்பு

புதுக்குடியிருப்பு, பெப். 3

புதுக்குடியிருப்பில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் திருகோணமலையிலிருந்து வந்த அகதிகளே அதிகமாக இறந்துள்ளனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பிரதிநிதி ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பு சம்பவம் ராணுவம் மறுக்கின்றது!

யாழ்ப்பாணம், பெப். 3

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புச் சந்தியில் ஸ்ரீலங்கா விமானப் படை பொம்மர்கள் நடத்திய தாக்குதலில் இருபது அப்பாவிப் பொதுமக்கள் உடல் சிதறிப் பலியான சம்பவத்தை ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பு மறுத்திருக்கிறதாம்!

இந்திய வானொலி இத்தகவலை நேற்று வெளியிட்டது.

புதுக்குடியிருப்பு குண்டு வீச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி




அப்ப......முழுப் பூசணிக்காயை சோத்திலை மறைக்கிற தங்கட புத்தியை இந்த விசயத்திலையும் காட்டுகினம் எண்டு சொல்லுங்கோ...!

## யாழ். நகரில் பி. பி. ஸி. செய்தியாளர்

பி.பி.ஸி. நிறுவனத்தின் கொழும்புச் செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸ், 'இந்து' நாளிதழ் செய்தியாளர் தோமஸ் பிரஹாம் மற்றும் 'டெய்லி டெலிகிராப்', "டைம்ஸ் ஒவ் இண்டியா" ஆகியவற்றின் செய்தியாளர்கள் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

கிறிஸ்தோபர் மொறிஸ் கோமஸ் எபிரஹாம் ஆகியோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய தலைவர்களைச் சந்தித்து பேட்டி கண்டதாகத் தெரியவந்தது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை (15726)

## பரதநாட்டிய வகுப்பு

பரதநாட்டியம் பயில விரும்பும் மாணவிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிமுதல் 11.30 வரை தொடர்பு கொள்ளுங்கள் 230, நாவலர் வீதி, (ஆலுப்பையடி சந்திக்கு அருகாமை) யாழ்ப்பாணம். (சி/5712)

## நாற்றுக் கன்றுகள்

பெயிடப சிறந்த இன விதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை நாற்றுக்கன்றுகள் விற்பனைக்குண்டு. ஐம்பது நாற்றுக்களுக்குமேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு சைவ வித்தியா விருத்திச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி. (C/5720)

## விற்பனைக்கு

எம்மிடம் புடோல், கத்தரி, முதனாம் மரக்கறி விதைகளும், இளங் கன்றுகளும் எலுமிச்சை, தோடை முதலியவைவும் விற்பனைக்கு உண்டு. மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (15736)

## மணப்பெண் தேவை

தாரமிழந்த 46 வயது இந்து அரசாங்க உத்தியோகத்தருக்கு ஆசிரியை அல்லது வேலை செய்யும் பெண் விரும்பத்தக்கது. 10 வயதுப் பிள்ளையுண்டு. எம்மிடம் மணமக்கள் இருக்கிறார்கள் மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (15737)

## ENGLISH

1991/92 ஆம் ஆண்டுகளுக்கான G.C.E. A/L English Literature வகுப்புகளும் G C E A/L மாணவர்களுக்கான General English வகுப்புகளும் நடைபெறுகின்றன. முகவரி: வ. கோவிந்தபிள்ளை 62, பழம்றோட், கந்தர்மடம். (15731)

## தவறிவிட்டது

பூனாறி மரத்தடி ஒழுங்கை விலாசத்தையும் 585610496x என்ற இலக்கத்தையும் குஞ்சலயா நாகராஜஐயர் என்ற பெயரைக் கொண்டதுமான அடையாள அட்டை நல்லூருக்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். இத்துடன் ஆசிரிய கலாசாலை அடையாள அட்டையும் தவறிவிட்டது. (15744)

## கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை புதிய பழைய கல்வித் திட்டத்திற்கமைய 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 20 மணித்தியாலத்திலிருந்து 40 மணித்தியாலயத்துள் ஆரம்ப அறிவிலிருந்து விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். A/L வரையும் சகல பாடங்களும் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கல்வியங்காடு. (15743)

---

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

அன்பான மாணவர்களுக்கு,

## மகாபொல கொடுப்பனவு

3 ஆம் தவணைப் பண நிலுவை (தை 1991)
4 ஆம் தவணைப் பணம் (மாசி 1991)

மேற்படி கொடுப்பனவை பின்வரும் ஒழுங்குகளுக்கமைய பெற்றுக்கொள்ளவும்.

| 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் வருட மாணவர்கள் | கொடுப்பனவு திகதியும் நேரமும் |
|---|---|
| கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு | 1 ஆம் வருட மாணவர்கள் மட்டும் 1-2-91 |
| வியாபார நிர்வாகப் பிரிவு | 5-2-91 பி.ப. 1-30—3-00 |
| உயிரியல் விஞ்ஞான பிரிவு | 6-2-91 பி.ப. 1-30—3-00 |
| பௌதீக விஞ்ஞான பிரிவு | 7-2-91 பி.ப. 1-30—3-09 |
| மருத்துவ பீடம் | 8-2-91 பி.ப. 1-30—3-00 |

கொடுப்பனவுகள் அனைத்தும் காசாக வழங்கப்படும். எனவே தவறாது மேற்கூறப்பட்ட திகதிகளில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவும்.

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

1. ரூபா 2/- பெறுமதியான முத்திரை
2. மாணவர் அடையாள அட்டை

பதிவாளர்

நிதிக்கிளை, யா/பல்கலைக்கழகம். (சி/5718)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

## அமரர். மா. சண்முகநாதன்

(ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி வடமராட்சி)

கனடாவில் இறைவனடி சேர்ந்த அமரர் மா. சண்முகநாதனின் மறைவினைக் கேள்வியுற்று அனுதாபச்செய்திகளை அனுப்பியோருக்கும், நேரில் அனுதாபத்தைத் தெரிவித்தோர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அன்னாரின் நினைவஞ்சலியும், சபிண்டீகரணமும் 04 - 02 - 1991 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு மைத்துனர் திரு. க. தெய்வேந்திரலிங்கத்தின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்திற்கு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. தெய்வேந்திரலிங்கம்,
குடும்பத்தினர்.
(பிள்ளையார் பார்மஸி)

உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு, புலோலி. (15728)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 1936 - 12 - 01

மறைவு: 1990 - 01 - 16

## சின்னத்துரை சண்முகராஜா

அன்பின் உருவமாய், பண்பின் பிறப்பிடமாய் பாசத்துடன் எம்மை எல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல் எம்மையெல்லாம் காத்திரே காலத்தின் கோலத்தால் காலன் உம்மை அழைத்து ஒரு வருடம் ஆயின. ஆனாலும் உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலாது.

பிரிவால் வருந்தும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

கதுமலை தெற்கு,
மாவிட்டபுரம். (15729)

---

# Spoken English Classes

பல பிரிவுகளாக ஆரம்பம்:

## 06-02-1991

- மாணவ மாணவிகளுக்கும்
- பாடசாலை சிறுவர்களுக்கும்
- உத்தியோகஸ்தர்களுக்கும்

விபரங்களுக்கு:

**North Ceylon Technical Institute**
14, St. Peter's Lane,
Hospital Road,
Jaffna.

(சி-5404)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமதி இந்திரேஸ்வரி மயில்வாகனம்

மலர்வு: 17 - 4 - 1932 உதிர்வு: 14 - 2 - 1990

ஆண்டு ஒன்றாகியும் ஆறாத துயரமம்மா - உம்மை
பிரிந்த நாள் முதலாய் துயரில் வேகின்றோம்
அன்புச் சுடரானாய், அணையாத தீபமானாய்
என்புருக நினைக்கின்றோம் எழுந்து நீ வாராயோ
என்றும் நீங்காத நினைவாக

கணவன், பிள்ளைகள், மருமகன்,
பேத்தி (லாவண்யா), சகோதரர்கள்.

"இருந்தணிகை"
98, பலாலி றோட்,
கந்தர்மடம். (15740)

---

# 31 ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

## அமரர் நாகலிங்கம் கதிர்காமலிங்கம்

தோற்றம்: 14 - 08 - 1917

மறைவு: 05 - 01 - 1991



உங்கள் வாழ்நாளெல்லாம் எங்கள் நல்வாழ்வுக்காக அயராது உழைத்து எம்மை உயர்நிலையில் வைத்த தந்தையே! உங்களை என்றும் மறவோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் 04 - 02 - 91 திங்கட்கிழமை, சுதாகர்வீதி, வல்வெட்டித்துறையில் உள்ள இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கிறோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (15746)

---

# மரண அறிவித்தல்

## திரு. க. கந்தசாமி

தாவடியைச் சேர்ந்த திரு. க. கந்தசாமி அவர்கள் 20 - 1 - 1991 இல் மலேசியாவில் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களாகிய கந்தையா திருமதி க. தங்கம்மா ஆகியோரின் அன்பு மகனும் கந்தப்பிள்ளை, திருமதிகள் இராசலட்சுமி, கனகம்மா, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வ. மயில்வாகனம்,
(மைத்துனர்)

சேர்ச் லேன்,
தாவடி தெற்கு,
கொக்குவில். (15748)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரடியாக பாதிக்கப்பட்டோர் மேலதிக உதவி கோருகிறார்கள்

யாழ்ப்பாணம், பெப். 3

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக, இராணுவ முகாம்கள் உள்ள பகுதிகளில் இருந்து வெளியேறியோருக்கு மேலதிக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டு வருகிறது.

பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் இருந்தும், காரைநகர் கடற்படைத் தளப் பகுதிகளில் இருந்தும் வெளியேறிய நூற்றுக்கணக்கான குடும்பங்கள் தற்போது அகதி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி இருக்கின்றனர்.

இக் குடும்பத்தவர்களில் பலர் தமது வீடு வாசல்களை இழந்துள்ளனர். அத்துடன் தொழில்களையும் இழந்துள்ளனர்.

தற்போது வழங்கப்படும் நிவாரணம், இப்படியானோருக்கு மேலதிகமாகக் கிடைக்க அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ)

## உதயன்

## கல்வித் தடை

யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பாடசாலைகளில் இந்த வருடத்துக்கான முதலாம் தவணை இன்னும் இரண்டு நாட்களில் — புதன்கிழமை — ஆரம்பமாகிறது.

பாடசாலை மாணவருக்கு முதலாம் தவணை ஆரம்பமாகும் வாரமும் அதற்கடுத்த ஓரிரண்டு வாரங்களும் குஷியானவை. புதிய புத்தகங்களையும், புதிய கொப்பிகள் மற்றும் எழுதுகருவிகள், உபகரணங்களையும் அவர்கள் ஆசையோடு வாங்கும் காலம். புதியவற்றைப் படிக்க வேண்டும், புதியவற்றில் எழுத வேண்டும் என்ற ஆவலால் படிப்பில் ஆர்வம் கொள்ளும் விசேட காலம்.

ஆனால் தமிழ்ப் பகுதி மாணவர்களுக்கு இம்முறை அந்தக் குஷியும், ஆவலும், ஆர்வமும் இருக்க முடியாது.

பாடநூல்கள் ஏதோ ஒரு விதத்தில இரண்டாவது வாரத்திலாவது கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. அதனை உரியகாலத்தில் தருவித்தவர்கள் நன்றிக்குரியவர்கள். ஆனால் கொப்பிகள், மற்றும் எழுது கருவிகள் கிடைப்பது என்பது நினைக்க முடியாதவையாகி விட்டன.

அரிசி, சீனி, மண்ணெண்ணெய் ஆகிய உணவுப் பொருள்களைப் போலவே கல்விக்குரிய எழுது சாதனங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு உருவாகியுள்ளது. காகிதாதிகளைக் கொழும்பில் இருந்து கொண்டு வருவதற்கு கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் தடை விதித்திருக்கிறது.

சாதாரண பிரசுரத்துக்குத் தேவையான காகிதாதிகளுக்கு மட்டுமன்றி, கல்வித் தேவைக்கான காகிதாதிகளும் தமிழ் பகுதிகளுக்கு அனுமதிக்கப்படவில்லை.

காகிதாதிகளும் அதனோடு சம்பந்தப்பட்ட எழுது சாதனங்களும் கல்வியோடு, அறிவோடு சம்பந்தப்பட்டவை. அவற்றுக்கு விதிக்கப்பட்டிருக்கும் தடை, கல்வித்தடையாகும். அரசியல் ஒடுக்குமுறை, பொருளாதாரத் தடை ஆகியவற்றோடு கல்வித் தடையும் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு எல்லாப் பக்கங்களாலும் — துறைகளிலும் — தமிழரை இறுக்கி, நெருக்கி அவர்களின் விடுதலை வேட்கையை சிதறடித்துவிட வேண்டும் என்ற சித்தாந்தத்தையே கொழும்பு அரசு தொடர்கிறது; தீவிரப் படுத்துகிறது.

இந்த இறுக்குதலும், நெருக்குதலும் தமிழர்களுக்கு மேலும் சுதந்திர உணர்வினை ஊட்டி வளர்க்கின்றன என்ற உண்மையை கொழும்பில் உள்ளவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இருக்கிறார்கள். இவர்களின் அந்தக் குறைபாடு, தமிழர்களைச் சுதந்திரத்துக்குச் சமீபமாக அழைத்துச் செல்கிறது என்பதே யதார்த்தம்.

நடப்பதெல்லாம் நன்மைக்கன்றி நானறியேன் பராபரமே — என்றவாறு, நிலைமையைச் சமாளித்து, மாற்று வழிகளையும், கடும் உழைப்பையும் தேடிக் கொள்வதைவிட தமிழருக்கு வேறு மார்க்கம் இல்லை. இதனை அடிமைப் புத்தியுள்ள தமிழர்களில் சிலர் இப்போதாவது கிரகித்துக் கொள்ள வேண்டும்.

எமது மண்ணே எமது பொக்கிஷம்; எமது கையே எமக்கு உதவி, எமக்கு வாழ்வு என்பதை எல்லாத் தமிழர்களும் உணர்ந்து கொள்ளட்டும்.

## யாழ்ப்பாணத்தவர் மீது இன்று இந்துவில் வழக்கு

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெற்று வரும் கலாசார விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் இன்று நடைபெறுகின்றன.

கல்லூரி அதிபர் திரு. அ. சி. குகதாசன் தலைமையில் நடைபெறும் காலை நிகழ்ச்சிகளில் 'இன்றைய கல்வி முறையின் பொருந்தப்பாடு' என்னும் பொருளில் கல்விக் கருத்தரங்கு நடக்க ஏற்பாடாகியுள்ளது. பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கருத்தரங்குக்குத் தலைமை வகிப்பார்.

மாலை நிகழ்ச்சிகளில் திரு. இ. ஜெயராஜ் தலைமையில் வழக்காடு மன்றம் இடம்பெறும். 'பாரதியின் கனவை நனவாக்கத் தவறியமை'' என்ற குற்றப் பத்திரிகை மீது யாழ்ப்பாணத்தவரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வழக்காடு மன்றம் நடைபெறும். (அ)

## பாதிக்கப்பட்ட 98 மாணவருக்கு நிதி உதவி

யாழ்ப்பாணம், பெப். 3

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் நல நிதியத்திலிருந்து கடுமையாக பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 98 மாணவர்கள் நிதியுதவி பெறத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு முதற்கட்டமாக மாதமொன்றுக்கு 400 ரூபா வீதம் 4 மாதங்களுக்கு வழங்கப்பட இருப்பதாக யாழ். பல்கலைக்கழக பதிவாளர் திரு. கே. பரமேஸ்வரன் தெரிவித்தார். (இ-6)

## புலிகள் கருத்தரங்கு

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கருத்தரங்குகள் கடந்த வியாழன் ஆனைக்கோட்டை, நவாலி, உயரப்புலம், சாவற்கட்டு, முள்ளி ஆகிய பகுதிகளில் இடம்பெற்றன. (இ-100)

## நெடுந்தீவில் உதவிப்பணம்

நெடுந்தீவு, பெப். 3

நெடுந்தீவில் கடந்த நான்கு மாதங்களாக வழங்கப்படாதிருந்த வறியமக்களுக்கான அரசாங்க உதவிப்பணம் இவ்வாரம் வழங்கப்பட உள்ளது. (இ-111)

## போதிய பணம் வந்த பின்பே நவம்பர் மாத ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், பெப். 3

செயலகத்தால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க 3 கோடி 50 லட்சம் ரூபா கட்டு நிதி கிடைத்தபின்பே நவம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதியம் வழங்கப்படும்.

இப்படிக் கூறுகிறார் யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்.

கொழும்பு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டதன் பின்னர் அவர் மேலும் தகவல் தருகையில், அவசரமான கொடுப்பனவுகளுக்காக 8 கோடி 50 லட்சம் ரூபாகட்டு நிதி அனுப்புமாறு கோரியிருந்தோம். 2 கோடி ரூபா மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மீதி மூன்றரைக் கோடி ரூபா அனுப்புமாறு கோரியுள்ளோம். அது கிடைத்த பின்பே நவம்பர் மாதத்துக்குரிய ஓய்வூதியம் வழங்கப்படும் - என்றார் அவர். (இ-8)

## 39 பேரின் விண்ணப்பம் ஏற்பு

சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களின் பெயர்ப்பட்டியல் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இருந்தும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் இருந்தும் 45 பேர் யாழ். அரச அதிபர் ஊடாக இதற்கு விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் 39 பேரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனதென உள்நாட்டலுவல் அமைச்சிலிருந்து கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-100)

## லெபனானில் ஷெல் வீச்சால் மனம் குழம்பியவர் பரிதாப முடிவு

தென்மராட்சி, பெப். 3

வேலைவாய்ப்புத் தேடி லெபனான் சென்றவர், நாடு திரும்பி தமது உயிரை மாய்த்துக்கொண்டார்.

நுணாவில் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. 30 வயது இளைஞர் ஒருவருக்கே இக்கதி ஏற்பட்டது.

இவர் லெபனான் சென்றபோது அங்கு இடம்பெற்ற ஷெல் வீச்சினால் மனம் குழம்பி இருந்தார் என்றும், இதனால் வேலைவாய்ப்புப் பெறமுடியாத நிலையில் நாடு திரும்பி இருந்தார் என்றும் கூறப்படுகிறது.

சாவகச்சேரி திடீர் மரண விசாரணை அதிகாரி நா. நரேந்திரா விசாரணை நடத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (இ-117)

## மாணவருக்கான கொப்பி அனுப்புவதில் தடங்கல்

யாழ்ப்பாணம், பெப். 3

பாடசாலை மாணவர்களுக்கு தேவையான அப்பியாசக்கொப்பிகளை அனுப்புவதில் தடங்கல்நிலை உருவாகியுள்ளதாக தெரியவந்தது.

கல்வி அமைச்சு இந்தக் கொப்பிகளை கப்பல் மூலம் அனுப்ப புனர் வாழ்வு அமைச்சிடம் தொடர்பு கொண்டது. கொப்பிகளை வாங்கி அனுப்பினால் யார் பணம் தருவது என்ற கேள்வி எழுந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ப.நோ.கூ. சங்கம் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் மூலம் கொப்பிகளை கொள்வனவு செய்தால் கப்பல் மூலம் அவை அனுப்பப்படும் என்று புனர் வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

ப.நோ.கூ. சங்கங்களுடன் யாழ்-அரச அதிபர் தற்சமயம் தொடர்பு கொண்டுள்ளார். (இ-3)

## துலாவைப் பயன்படுத்துவதில் விவசாயிகள் ஆர்வம்

உரும்பராய், பெப். 3

எமது பாரம்பரிய முறையின்படி துலா-பட்டை மூலம் பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை உரும்பராய்ப் பகுதி விவசாயிகள் செய்யத் தொடங்கியுள்ளனர். இதற்காக தோட்டப் பகுதிகளிலும், வயல் பகுதிகளிலும் துலா அமைக்கும் பணியில் பலர் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது மண்ணெண்ணெய், மின்சாரம் இன்மையால் துலாவின் அவசியம் உணரப்பட்டுள்ளது.

அநேகமானவர்கள் தென்னை மரத்தில் துலா வைச் செய்கின்றனர். காய்க்காத மரங்கள் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இம்மரங்களுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஒரு மரம் நூறு ரூபா வரையில் விலை போகின்றது. தச்ச தொழிலாளருக்கும் தொழில் கிடைத்துள்ளது. (இ-154)

# ஈராக் படை வாபஸ்

சவூதியில் அல்ஹாவி நகரில் இருந்த ஈராக்கிய துருப்புகள் வாபஸாகி விட்டன என்று பக்தாத் வானொலி அறிவித்தது.

இது சம்பந்தமாக ஈராக் இராணுவத்தின் அறிக்கை ஒன்றை ஒலிபரப்பிய பக்தாத் வானொலி, துருப்புகள் வாபஸ் வாங்கப்பட்டதற்கான காரணம், துருப்புகளுக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றிய விவரங்களை வெளியிடவில்லை.

ஆனால் - பன்னாட்டுப் படையினருக்குப் பல ஆச்சரியங்களைக் கொடுக்கும் நடவடிக்கைகள் இன்னும் ஈராக்கிடம் உள்ளன என்று பக்தாத் வானொலி தெரிவித்தது.

## மொரோக்கோ வாபஸ் பெறாது

பன்னாட்டுப் படைகளுடன் இணைந்து சண்டையிடும் தமது படைகளை வாபஸ் வாங்கப் போவது இல்லை என்று மொரோக்கோ மன்னர் ஹஸன் அறிவித்துள்ளார். ஈராக்குக்கு எதிராக போரிட மொரோக்கோ படைகளை அனுமதிக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சிகள் விடுத்த வேண்டுகோளை மன்னர் நிராகரித்து விட்டார்.

## 110 ஈராக்கிய விமானங்கள் ஈரானில்

ஈரானில் தரையிறங்கும் ஈராக்கிய போர் விமானங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதாக அறிவிக்கப்படுகிறது. தற்போது 110 போர் விமானங்கள் ஈரானில் பல விமான நிலையங்களில் தரை இறங்கியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

## படை விலகினாலும் போர் தொடரும்

★ குவைத்தில் இருந்து ஈராக் படைகள் விலக்கப்பட்டாலும், ஈராக் மீதான போர் தொடரும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் சொன்னார். குவைத்தில் இருந்து வாபஸ் வாங்கிய பின்னரும் ஈராக் பிரதேசத்தில் இருந்து கொண்டு ஈராக்கிய படைகள் குவைத் மீது ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் ஆபத்து நீங்கும் வரை போர் தொடரும் என்றும் பிரதமர் மேஜர் சொன்னார்.

## அமெரிக்காவே முடிவு செய்யுமாம்

★ குவைத்தை மீட்கும் தரையுத்தம் பன்னாட்டுப்படைகள் தீர்மானிக்கும் கால அட்டவணைப்படி தான், அதுவும் தேவை என்றால் தான், ஆரம்பிக்கப்படும் என்று ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அறிவித்தார்.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் நிர்ணயிக்கும் கால அட்டவணைப்படி நாம் தரை யுத்தத்தை ஆரம்பிக்கப் போவது இல்லை என்று ஜனாதிபதி புஷ் சொன்னார்.

பன்னாட்டுப்படைகளை தரை யுத்தத்திற்கு வலிந்து இழுக்கும் ஈராக் படைகளின் முயற்சிக்கு இடமளிக்கப்பட மாட்டாது என்று திரு. புஷ் சொன்னார்.

## கிரிமினல்களாக நடத்தப்படுவர்

★ பன்னாட்டுப் போர் விமானிகள் பிடிக்கப்பட்டால் கிரிமினல்களாகவே இனி நடத்தப்படுவார்கள் என்றும் யுத்தக்கைதிகளாக கருதப்படமாட்டார்கள் என்றும் ஈராக் அறிவித்துள்ளது. மக்கள் மீது குண்டு வீச்சுத் தாக்குதல்களை சவிரக்கமின்றி பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்தி வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஈராக் அறிவித்து உள்ளது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வீரவேங்கை மேஜர் கௌரி (சதானந்தன் அனுதீபன்)

சதானந்தன் அனுதீபன் 26 - 01 - 1991 சனிக்கிழமை வீரமரணமடைந்தார்.

இவர் சண்டிலிப்பாயைச் சேர்ந்தவர்களும் மன்னார் வட்டக் கண்டல் வாசிகளுமான பொ. சதானந்தன் இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும் அனுராஜ் (கனடா), அனுஜெயன் (யாழ். மத்திய கல்லூரி முறைசாராக்கல்வி மாணவன்), கௌரி (மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சண்டிலிப்பாய் திருமதி க. செல்வரத்தினத்தின் பேறாமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 27 - 01 - 1991 அன்று ஞாயிற்றுக்கிழமை வட்டக்கண்டலில் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சதானந்தன்
வட்டக்கண்டல்,
மன்னார் [15738]

## திருமதி நாகமுத்து இராமநாதன்

நெடுந்தீவு கிழக்கைச் சேர்ந்த திருமதி நாகமுத்து இராமநாதன் 29-01-91 ஆம் திகதி காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகப்பர் இராமநாதனின் மனைவியும் நாகேந்திரம் [225/1, விசுவமடுக்குளம்], தர்மலிங்கம் (பொது முகாமையாளர், நெடுந்தீவு பலநோ. கூ. சங்கம்) ஆகியோரின் தாயாரும் பராசக்தி, தவமணி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

ஈமக்கிரியைகள் நெடுந்தீவில் நடைபெற்றன. உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
இரா. தர்மலிங்கம்
11 ஆம் வட்டாரம்'
நெடுந்தீவு [15741]

## திரு. கதிரிப்பிள்ளைஐயர் ஆறுமுகசாமிஐயர்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய பிரதம குருக்களும், ஸ்ரீ முருகன் அன்னதான சபைத் தலைவரும் ஆகிய திரு. கதிரிப்பிள்ளை ஐயர் ஆறுமுகசாமி ஐயர் அவர்கள் தைபூசம் (30-01-1991) அன்று காலை தமது 85ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் வேதநாயகியின் அன்புக் கணவரும், மாணிக்கம், சிவசண்முகம் ஐயர் ஆகியோரின் அன்புத் தந்தையும், தெய்வேந்திர ஐயர், தெய்வறதியின் அன்பு மாமனாரும், சி. சந்திரசேகரம், சி சுப்பையா ஆகியோரின் தாய்மாமனும், மகேந்திராணி, ஜெயந்திரன், சசீந்திரன், ரவீந்திரன், தஷிந்திரன், பங்கயச்செல்வி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார். ஈமக்கிரியைகள் அன்றைய தினம் நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. சிவசண்முகம் ஐயர்
[15743]

## திருமதி செல்வரத்தினம் மகாலிங்கம்

(கைதடி சேதுகாவலர் வித்தியாலய முன்னாள் அதிபர்)

திருமதி செல்வரத்தினம் மகாலிங்கம் [கைதடி சேதுகாவலர் வித்தியாலய முன்னாள் அதிபர்] காலமானார். அன்னார் மட்டுவிலைச் சேர்ந்த காலம் சென்ற அதிபர் சபாபதி மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், பரமானந்தேவி, பரமநாதன் (அவுஸ்திரேலியா), பரமானந்தராசா (கூட்டுறவுப் பரிசோதகர், யாழ்ப்பாணம்), பரமநாயகம் [கணக்காளர், நெடுங்கேணி ப. நோ. கூ. சங்கம்], கிருஷ்ணதாசன் [கணக்காளர், நோர்வே], கணேஸ்வரன், சுந்தரானந்தன் (விவசாய போதனாசிரியர், சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், மயில்வாகனம் (முன்னாள் கிளிநொச்சி கல்வி அதிகாரி, பொஸ்வானா), இரத்தினேஸ்வரி [அவுஸ்திரேலியா], இலகவதி (ஆசிரியை, துணுக்காய்), நவமணி (நெடுங்கேணி), ஈஸ்வரகுமாரி [நோர்வே] நாகேஸ்வரி, சுபாஜினி [உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நல்லூர்] ஆகியோரின் அன்பு மாமியும், சுஜித்திரா [மக்கள் வங்கி, மாங்குளம்], கவிதரன் (இந்தியா) சுரேசன் [இந்தியா], கபாலினி, தயாளினி, சுதர்சினி, நிரோசா, கவிதா, சுஜிந்தா, செந்தூரன், நிரஞ்சுதன், மஞ்சுதன், வைஷ்ணவி, சஞ்சுதன், கோகுலன், மயூரன், துஜித்தா, சாமினி, தர்சிகா, அயாளினி, கீர்த்திகா, சாமவன், தாரகன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-2-91 ஞாயிற்றுக்கிழமை பி. ப. 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:- திருமதி ப. மயில்வாகனம்.
"உதயதாரகை"
கைதடி மத்தி,
கைதடி (15747)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 03 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மாணவர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், பெப். 3

விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத்தின் மாதாந்த ஒன்று கூடல் நிகழ்ச்சி இன்று காலை 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும் என மாணவர் இயக்கத்தின் யாழ் மாவட்டப் பொறுப்பாளர் சமரிசால் அறிவித்துள்ளார். (உ)

# சுகாதார வாரம்

நல்லூர் பிரதேசசபை இன்று 3 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதிவரை சுகாதார வாரம் கொண்டாடுகிறது

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட பொது ஸ்தாபனங்கள், பாடசாலைகள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அனுசரணையுடன் சுகாதார வாரம் கொண்டாடப்படுகிறது.

பாடசாலை மாணவருக்கான சித்திரப் போட்டியும் நடைபெறும் இது தொடர்பான சித்திரக் கண்காட்சி எதிர்வரும் 9 ஆம் திகதி காலை முதல் பிற்பகல் 2 மணி வரை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும்.

# புதுக்குடி..

த் தாக்குதல் குறித்து விவரமான முழுத் தகவல்கள் குடாநாட்டுப் பத்திரிகைகளில் வெளியாகின என்பதும்—

இச்சம்பவத்தில் படுகாயமுற்ற பத்துக்கும் அதிகமான பொதுமக்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதும்—

யாழ். செஞ்சிலுவைச் சங்க நடமாடும் வைத்திய சேவைப் பிரிவு சம்பவம் நடந்த இடத்தில் இருந்து திரட்டிய அறிக்கையில் உயிரிழந்தோர் விவரம் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதும்—

புதுக்குடியிருப்பு சம்பவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கவை ஆகும். (உ-ஈ)

# அகதிமுகாம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திறந்தவெளிஅரங்கு, இரண்டு மண்டபங்கள் மற்றும் புதிதாகக் கட்டப்பட்டு வரும் ஒரு கட்டடம் ஆகியவை பலத்த சேதமுற்றன.

பாடசாலைத் தளபாடங்கள் எங்கும் சிதறிக் காணப்பட்டன.

தாக்குதல் நடந்த சமயம் பாடசாலையில் வலி. வடக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்த 28 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் நூறு அகதிகள் தங்கியிருந்தனர்.

அவர்களில் தையிட்டியைச் சேர்ந்த செல்வரத்தினம் கீதா [வயது 16] என்ற அகதிப்பெண் ஒருகாலை இழந்த நிலையில் படுகாயமடைந்தார். அம்பிகாபதி [வயது 52], பிரேமாவதி [வயது 27], ஏ. எஸ் ஸ்ரீஸ்கந்தராஜா [வயது 49] ஆகியோரும் இச்சம்பவத்தில் காயமடைந்தனர்.

பாடசாலைக்கு அருகில் இருந்த நான்கு வீடுகளும் இச்சம்பவத்தில் சேதமுற்றன. (உ-8 15-69)

# ஷிப்றா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் ஐம்பது நிதி நிறுவனங்களில் இந்த 21 நிறுவனங்களுக்கு மட்டும் தொடர்ந்து நிதி நிறுவன நடவடிக்கைகளில் ஈடுபட அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதன்படி மத்திய வங்கியினால் இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. [உ]

# மாவிட்டபுரத்தில் நேற்று மூவர் வீரமரணம்

யாழ்ப்பாணம், பெப். 3

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று நண்பகல் 11.30 மணியளவில் வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் மூவர் வீரமரணமடைந்தனர்.

செந்தில் (செல்லப்பா சுரேஷ்குமார் - அளவெட்டி), சந்திரன் (சின்னையா குணசேகரன்-கிளிநொச்சி), வாமதேவன் ஆகியோரே வீரமரணமடைந்தவர்கள் ஆவர்.

இராணுவ தரப்பில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. (உ)

# ★ இப்படியும் அதிஷ்டம்

யாழ்ப்பாணம், பெப் 3

நாவற்குழியில் நேற்று நடந்த குண்டு வீச்சில் தென்னைமரம் ஒன்று வெட்டுண்டு மேல் பகுதி கீழே சரிந்து விழுந்தது.

அப்போது மரத்தின் உச்சியில் இருந்த கந்தன் செல்லன் என்னும் தொழிலாளியும் மரத்துடன் சேர்ந்து கீழே விழுந்தார். அதிஷ்டம் அவரைக் காப்பாற்றியது. அவருக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை.

அந்த வேளையில் இரண்டாவது குண்டும் வீசப்பட்டது. அந்தச் சிதறலில் ஒன்று பாய்ந்து வந்து அவரைத் தாக்கியது. அதில் அவர் காயமுற்றார்.

காயத்துடன் அவர் எழுந்து ஓடினார். அதே பகுதியில் மூன்றாவது குண்டும் வீசப்பட்டது. கந்தன் செல்லன் மயிரிழையில் தப்பி விட்டார். [ஒ-15]

# கொழும்பு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னர் புறப்பட்டவர்களும் இன்னமும் வவுனியா மகாவித்தியாலயத்திலேயே தங்கி உள்ளனர்.

இவர்கள் தமது பயணத்தைத் தொடர இராணுவம் அனுமதிக்கவில்லை என்று அறியவருகிறது. குறிப்பிட்ட ஒரு திகதியைக் கூறி அதன் பின்னரே வடக்கிலிருந்து வருவோர் கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுவர் என்று அவர்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் கூறுகின்றனராம்.

இதற்கிடையில் வவுனியா மகாவித்தியாலய முகாமில் தண்ணீர், உணவுவசதி மிக மிகக் குறைவென்றும், அங்கு பதற்றத்துடனும் பல கஷ்டங்களுடனும் சிரமங்களுடனும் தங்கவேண்டியுள்ளதாகவும் அங்கிருந்து திரும்பி யாழ்ப்பாணம் புறப்பட்ட ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார் (அ)

# செஞ்சிலு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வர் நிலைமையை அறிய நேரில் வந்தார்.

அவரை கண்டதும் அங்கிருந்த அகதிகள் தங்களுக்கு நேர்ந்த கதியைக் கூறிக் கதறி அழுதனர். பலியானவர்களின் உறவினர்களும் செஞ்சிலுவைப் பிரதிநிதியிடம் "அகதிகளாக வந்த எங்களுக்கு இந்தச் சோதனை ஏன்?" என்று விம்மி விம்மி அழுதார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமை இங்கு விஜயம் செய்திருந்த பிரஸ்தாப செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி 22 பொதுமக்கள் குண்டு வீச்சில் இறந்தது குறித்துக் கவலை தெரிவித்தார்.

விமானத் தாக்குதலால் அகதிகளே கூடுதலாக பாதிக்கப்பட்டதால் அவர்களுக்குக் குடிசை அமைத்து தங்குமிட வசதி செய்ய இருப்பதாகவும்—

உடனடி நிவாரணமாக உணவு, உடுபுடைவைகளை வழங்க ஏற்பாடு செய்ய உள்ளதாகவும் தெரிவித்தார். (அ-3)

# மரண அறிவித்தல்கள்

திகதி மாற்றம்

## திருமதி றோசலின் அமிர்தரத்தினம் வல்லிபுரம்

அன்னாரின் அடக்க ஆராதனை முன்னர் அறிவித்தபடி [3-2-91] இன்று நடைபெறமாட்டாது என்பதையும், செவ்வாய்க்கிழமை 5-2-91 பி பகல் 3 00 மணிக்கு கானான் ஜெப ஆலயத்தில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகிறோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

"ராணி கொட்"
இருபாலை,
கோப்பாய். (15749)

தகவல்:
ஈ. ஏபிரகாம்
(மருமகன்)

## திருமதி அந்தோனியாப்பிள்ளை சூசைப்பிள்ளை

திருமதி அந்தோனியாப்பிள்ளை சூசைப்பிள்ளை அவர்கள் காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற திரு. திருமதி இராயப்புவின் அன்பு மகளும், திரு. சின்னப்பு சூசைப்பிள்ளை (இளைப்பாறிய கனிஷ்ட பரிசோதகர் யாழ். தபால் அலுவலகம்) அவர்களின் அன்பு மனைவியும், மேரி கிறேஸ் [ஆசிரியை நல்லூர் சென் பெனடிக்ற் றோ. க. பாடசாலை], லில்லி மகுறேஜ் [ஆசிரியை கலஹா தமிழ் மகா வித்தியாலயம்], அன்ரன் றோபேட் [நெதர்லாந்து]. அன்ரன் குணசீலன் ஆகியோரின் அன்புத்தாயாரும், திரு இராயப்பு யோசப் [பொலிஸ் உத்தியோகத்தர்], திருமதி புஸ்பரத்தினம் தியாகராஜா, திரு. பிரான்சிஸ் அருள்நாயகம் [அஞ்சல் அதிபர் அஞ்சலகம் ஹற்றன்] ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி பிரான்சிஸ்க்கம்மா, சின்னத்தம்பி, திருமதி மேரி றோசலின் டேவிற், திருமதி மல்லிமலர் யோசப், திரு. பொன்னையா தியாகராஜா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் [03-02-91] இன்று பிற்பகல் 3 30 மணியளவில் நல்லடக்கத்திற்காக டரி கொஞ் சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

58, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (15415)

தகவல்:
சி. சூசைப்பிள்ளை
(கணவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org